# ஆரம்ப பிள்ளைப் பருவ விருத்திக்கான

## வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகள்



### ஆறாம் புத்தகம்

## வெளியே வேலை செய்யும் போது

பெண்கள் விவகார அமைச்சு
சிறுவர் செயலகம்
யுனிசெப் அனுசரணையுடன்

மறுபதிப்பு -2005
அனுசரணை-சிறுவர் பாதுகாப்பு ஸ்ரீலங்கா

# முன்னுரை

குழந்தை பிறந்த நேரந் தொடக்கம் தன் சூழலுக்கு இசைவான முறையில் துரிதமாக வளர்கிறது. அதன் அறிவு, அடிப்படை ஆற்றல்கள், எண்ணங்கள் என்பனவும் படிப்படியாக விருத்தியடைகின்றன. பெற்றோர், பெரியோர், அயல் அட்டச் சூழல் ஆகியன அதன் விருத்திக்குத் துணைபுரிகின்றன.

ஆயினும் மேற்சொன்ன வளங்களைக் குழந்தை பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கு அக் குழந்தையின் அறிவாற்றல் செம்மையான முறையில் நெறிப்படுத்தப்படல் வேண்டும். இது விடயத்தில் பாலர் பாடசாலைகள் கணிசமான பங்காற்றுகின்றன. ஆயினும் இலங்கையில் பாலர் பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்பற்ற பிள்ளைகள் தொகை பெரிதாகும். ஆகவே, பெற்றோர் தம் குழந்தைகளின் விருத்தியைச் செவ்வனே நெறிப்படுத்துவதற்கு ஏற்றவாறாக வீட்டைப் பகைப்புலமாகக் கொண்ட உணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தல் அவசியம்.

போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகம் இந்தத் தேசிய தேவையைநிறைவேற்ற முற்பட்டுள்ளது. பெற்றோர் மத்தியில் இது தொடர்பான உணர்வை ஏற்படுத்தும் பொருட்டு எட்டுச் சிறு நூல்களை அது உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக யுனிசெப் எமக்களித்த உற்சாகத்துக்கும் உதவிக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்துறையில் தேர்ச்சி பெற்ற திறனாளர்களின் பங்களிப்புக்கும் வீட்டைப் பகைப்புலமாகக் கொண்ட செயற்பாடுகளை வெளி இடங்களில் பரீட்சிப்பதற்கு ஒத்தாசை புரிந்த வெவ்வேறு அமைப்புகளின் ஆதரவுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

பெற்றோர் தம் குழந்தைகளின் பூரண விருத்தியை ஊக்குவிப்பதற்கு இந் நூல்கள் வழிகாட்டுமென நம்புகிறோம்.

**டீற்றா விமலசிறி**
மேலதிக செயலாளர்
மகளிர் பிரிவு

# சிறுவர் செயலகத்தின் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் ஆரம்பப் பராய சிறு வயதிலுள்ள பிள்ளைகளின் பூரண அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயல்களை இணைக்கும் நிறுவனமாக நடவடிக்கைகள் மேற்கொள்வதே சிறுவர் செயலகத்தின் பொறுப்பாகும்.

இவ்வுலகில் பிறக்கும் குழந்தையை சிறந்த ஒரு பிரஜையாக உருவாக்குவதற்கு ஆரம்ப அடித்தளமாக இருப்பது வீடே. ஒரு நாளைக்கு வெறும் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே சிறுவர் நிலையத்தில் கழிக்கின்றன. மிகுதியான அதிக நேரங்களை வீட்டிலேயே கழிக்கும் பிள்ளைகளின் பூரண அபிவிருத்திக்கான பாரிய பொறுப்பு பெற்றோரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

பெற்றோர்கள் மற்றும் முதியோர்கள் நாளாந்த வீட்டுவேலைகளில் ஈடுபடும் போது தேவைக்கேற்ப சிறுவர்களையும் அவ்வேலைகளில் சேர்த்துக்கொண்டும் அவர்களுடன் உரையாடிக்கொண்டும் அவர்களுக்கு உற்சாகத்தைப் பெற்றுக்கொடுப்பதும் மிகவும் முக்கியமாகும்.

1993 ஆம் ஆண்டு தொடக்கம் சிறுவர் செயலகத்தால் நடாத்தப்பட்ட ஆய்வின்படி 1996 ஆம் ஆண்டின் ''யுனிசெப்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட ஆரம்ப பருவ சிறுவர் அபிவிருத்திக்கு வீட்டில் செய்யும் செயற்பாடுகள் என்ற நூல்கள் பிரயோசனமாக அமைந்துள்ளன.

மற்றைய நாட்களை விட பிள்ளைகளை பற்றி பெற்றோரையும் முதியோர்களையும், மேலும் மேலும் அறிவூட்ட வேண்டிய காலகட்டத்தில் இந்நூல்களை மீண்டும் அச்சிட்டு வீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பப் பருவ விருத்தி வேலைத்திட்டத்தை அமுல்படுத்த முன்வந்த இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்கும், இந்நூல்களை வெளியிட துணைப்புரிந்த திருமதி மயூரா குணசிங்க அவர்களுக்கும் செல்வி. அமரா அமரசிங்க அவர்களுக்கும் யுனிசெப் நிறுவனத்திற்கும், ஆய்வு செய்வதற்கு உதவியாக இருந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**வினித்தா வீரசேகர**
பணிப்பாளர்
சிறுவர் செயலகம்
சமூக நல அமைச்சு

# அறிமுகம்

பெற்றோரே தம் பிள்ளைகளுக்கு முதலாவது ஆசிரியர்கள். ஒரு குழந்தை தன் புலன்கள் மூலமாகப் பெறும் ஆரம்ப அனுபவங்கள் அர்த்தமுடையனவானால் அக் குழந்தையின் விருத்தி அவற்றால் தாக்கம் பெறும். குழந்தையின் எதிர்கால விருத்தியின் முன்னேற்றம் அது முதிர்ச்சியடையும் வேகத்தைப் பொறுத்தே அமையும்.

ஓர் இருப்பிடத்தில் உள்ளோர், அந்த இருப்பிடத்தின் நடவடிக்கைகள், அங்குள்ள வாய்ப்பு, வசதிகள் என்பன குழந்தையின் அறிவு விருத்தியடைதற்கு வழி வகுக்கின்றன. இந்த வாய்ப்புகள் புலன் வழி உணர்வுகளையும் அனுபவங்களையும் குழந்தை அறிந்து கொள்ள உகந்த முறையில் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

வாய்ப்புகளும் வளங்களும் போதிய அளவில் கிடைத்தால் மட்டும் விருத்தி ஏற்பட்டுவிடாது. அந்த வாய்ப்புகளுடனும் வளங்களுடனும் குழந்தை உறவாடுதல் மூலமே குழந்தை புலன் வழி அனுபவங்களைக் கற்றுக் கொள்கிறது. முன்னர் பெற்ற ஓர் அனுபவத்துடன் தொடர்புபடுத்துவதன் மூலமே புதிய அனுபவங்களைக் குழந்தை கற்றுக்கொள்கிறது. பெரியவர்களின் பராமுகமும் புதிய அனுபவங்களைப் பெறும் வாய்ப்புகள் இல்லாமையும் குழந்தையின் இடர்ப்பாட்டுக்கும் விருத்தி குறைவடைவதற்கும் ஏதுவாகலாம்.

ஒரு குழந்தையின் அறிவு விருத்திக்கு, அதன் பிறப்பிற்கும் முதன் முறை பாடசாலை செல்வதற்கும் இடைப்பட்ட காலம் மிக முக்கியமானதாகும். விருத்தியடையும் இந்தப் பருவத்திலே பெற்றோர் முக்கிய பங்கேற்க வேண்டியது அவசியம்.

இந்த எட்டுச் சிறு நூல்களிற் கொடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் பெற்றோர் தம் குழந்தைகளை இலகுவான மனை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கும் அவை பற்றி உரையாடுவதற்கும் உதவும். அவற்றின் மூலம் பிள்ளைகள் அறிவையும் அடிப்படை ஆற்றல்களையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்ள வாய்ப்பேற்படும். வீட்டிலே மேலும் பல நடவடிக்கைகள் இடம் பெறலாம். அவை எல்லாமே இவ்வாறு பயன்படத்தக்கவை. குழந்தையின் விருத்தி எவ்வாறு படிப்படியாக நிகழ்கிறதென்பதைப் பெற்றோர் நேரிற் காணும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள். பிள்ளை பாலர் பாடசாலைக்குப் போனாலும் போகாவிட்டாலும் விருத்தி நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. எனினும் **இதனை உணர்ந்து பிள்ளையின் விருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் பெற்றோர் கடமையாகும்.**

வீட்டைப் பின்புலமாகக் கொண்ட இந்தச் செயற்திட்டம் முறையான பாடசாலையிற் சேரமுன் பாலர் பாடசாலையிற் பயிலும் வாய்ப்பற்ற பிள்ளைகளுக்கு நல்ல அனுபவங்களையும் அடிப்படை அறிவையும் நல்ல பழக்க வழக்கங்களையும் புகட்டும் நோக்கத்துடன் தொடக்கப்பட்டதாகும்.

பாலப் பருவப் பிள்ளையின் விருத்திக்கென வீட்டைப் பின்னணியாகக் கொண்ட செயற்பாடுகள் அடங்கிய முதல் எட்டுப் புத்தகங்களும் பாலப் பருவப் பிள்ளையின் விருத்திக்கான செயற்திட்டமாகச் சிறுவர் செயலகத்தினால் முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளைக் கிராமப் பகுதிகளில் உள்ள பிள்ளைகளோடு பரீட்சித்துப் பார்ப்பதற்கு தொண்டர் தாபனங்கள், அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்த பதினெட்டு அனுசரணையாளர்களும் கிராமிய மட்ட மத்தியஸ்த தொண்டர்களும் பெரிதும் உதவினார்கள்.

**புத்தகங்களின் முதற் பகுதியில்**

1) இளம்பிள்ளைகள் பற்றி மனத்திருந்த வேண்டிய உண்மைகளும்

2) பெற்றோருக்கு உணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பிக்கும் பயிற்சி உத்தியோகத்தர்களுக்குப் பயனுள்ள உண்மைகளும் அடங்கியுள்ளன.

**செயற்பாடுகள்:** இரண்டு வயது மட்டப் பாலகர்களுக்கு உகந்த, வீடு சார்ந்த செயற்பாடுகள் (மூன்று வயதுக்கு உட்பட்டவர்களும் மூன்று வயதுக்கு மேற்பட்டவர்களுக்குமான சிறுவர்களுக்கு)

**மூன்று வயதுக்குட்பட்ட பாலகர்:** இரண்டு வயது முதல் மூன்று வயது வரையான பாலகர்களை மட்டுமே குறிக்கும்.

மூன்று வயதுக்கு மேற்பட்ட பாலகர்கள்: மூன்று வயது முதல் ஐந்து வயது வரையான பாலகர்களைக் குறிக்கும். பாலகர்களின் முதிர்ச்சி, தனித்துவமான வேறுபாடுகள் ஆகியவற்றிற் கவனம் செலுத்துதல் அவசியம்.

வருங்காலத்தில் 0-2 வயதுப் பாலகர்களுக்கு உகந்த செயற்பாடுகளைத் தயாரிக்க எண்ணுகிறோம்.

**மயுரா குணசிங்க**
**அமரா அமரசிங்க**

# நம் குழந்தைகள்

- **நம் அன்பை எதிர்பார்க்கின்றனர்:**

  - அவர்களை நம் மடிமேல் வைத்துத், தடவி, அவர்களுடன் அன்பாய்ப் பேசி அவர்கள் மீது நம் அன்பைத் தெரிவிப்போம்.
  - நமது ஓய்வு நேரத்தில் நம் குழந்தைகளை நமக்கு அருகே கொண்டுவந்து, அன்புடன் பேசி அவர்களுக்கு விருப்பமானது என்ன, விருப்பமில்லாதது எதுவென்று அறிவோம்.

- **தம்மைக் கவனித்துக் கொள்ளுமாறு எதிர்பார்க்கிறார்கள்**

  - அவர்களை எப்போதும் கவனிப்போம்.
  - எதைப்பற்றியும் அவர்கள் பயப்படும் போது அவர்களை நமக்கு அருகே கொண்டு வந்து அவர்களது பயத்தைப் போக்க உதவுவோம்.
  - அவர்கள் நம்மீது நம்பிக்கை கொள்ளும் முறையில் நடந்து கொள்வோம்.

- **நமது கவனத்தை எதிர்பார்க்கின்றனர்**

  - அவர்கள் சொல்வதைக் கவனித்துக் கேட்போம்.
  - அவர்களுடைய கேள்விகட்கு மறுமொழி சொல்வோம்.
  - அவர்கள் சொல்வது நமக்குத் தெளிவாக விளங்குவதாக அவர்கள் உணரும் படி செய்வோம்.
  - அவர்களுடன் விளையாடுவோம்.
  - அவர்கள் சொல்வதையும் செய்வதையும் மதிப்போம்.

# நாம் நினைவில் வைக்க வேண்டியன

- **ஒரே வயதுடைய குழந்தைகளும் ஒரே மாதிரியானவர்களில்லை.**

- அவர்கள் பல விதங்களில் வித்தியாசமானவர்கள்.
  யோசிக்கிற விதங்களில், அலுவல்களைச் செய்கிற விதங்களில், நடந்துகொள்ளும் விதங்களில்).

- **அவதானிப்பதாலும் பரிசோதனை செய்வதாலும் விளையாட்டின் மூலம்** அவர்கள் கற்கிறார்கள்.

- பிற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடியும் கதைத்தும் பாடியும் அவர்கள் பிறருடன் சேர்ந்து பழக கற்கிறார்கள்.

- குழந்தைகள் தமது பொழுதை மகிழ்வுடன் கழிக்க விரும்புகிறார்கள். (அவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்க, நாம் இயலுமான சகல வாய்ப்புக்களையும் கொடுப்போம்).

- நாம் காட்டுகிற **முன்மாதிரியைப் பின்பற்றியே குழந்தைகள் நல்ல பழக்க வழக்கங்களை பழகுகிறார்கள்.**
  (உதாரணமாக, மரியாதையாகப் பேசுவது, நல்லபடி நடப்பது, முறையாக வேலை செய்வது, பகிர்ந்து கொள்வது, உதவி செய்வது).

## குழந்தைகளுடன் வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல் முறைகளில் ஈடுபடும் போது பின் வருவனவற்றை நினைவில் வைத்திருப்போம்

- **நாம் வீட்டிற் செய்கிற வேலைகளின் அடிப்படையில்,** குழந்தைகளை ஊக்கப்படுத்துகிற செயல்முறைகளைத் தெரிந்தெடுப்போம்.

- **ஒருநாளில் இரண்டுக்கு அதிகமான செயல்முறைகளில்** குழந்தைகளை ஈடுபடுத்த வேண்டாம்.

- குழந்தை தொடர்ந்தும் செய்ய விரும்பினால் இன்னும் **செயல்முறைகளை அறிமுகப்படுத்துவோம்.**

- வேலை செய்யும் போது அல்லது செய்து முடித்த பிறகு அந்தச் செயல்முறைகள் பற்றிக் **குழந்தைகளுடன் கதைப்போம்.**

- குழந்தைகளுடைய திறமைகளுக்கும் வயதுக்கும் ஏற்ற விதமாக **அவர்களுக்கான செயல்முறைகளை ஒழுங்கு செய்வோம்.**

- குழந்தைகளை மேலும் மேலும் செயல்முறைகளில் வற்புறுத்தி ஈடுபடுத்தாமல் **அன்புடன் ஒரு சில செயல்முறைகளில் ஈடுபடுத்துவோம்.**

- அவர்கள் **எதையும் திருப்திகரமாகச் செய்யும் போதெல்லாம் பாராட்டுவோம்.**

- குழந்தை **செய்யத் தொடங்கிய வேலையை** முடிக்கும்படி **இனிமையான முறையில்** குழந்தையை **உற்சாகப்படுத்துவோம்.**

# பெற்றோருக்கான விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நடத்தும் போது அலுவலர்களுக்கு பயனுள்ள விடயங்கள்

சந்திப்பு

- பெற்றோரை **ஒவ்வொருவராக** அல்லது (5 அல்லது 6 பேரைக் கொண்ட) சிறு குழுக்களாகச் சந்திக்கவும்.
- சந்திப்புக்கு **வசதியான இடமும் நேரமும் திகதியும்** பற்றி **முடிவு செய்த பின்** பெற்றோருக்கு **வேளைக்கே தெரிவிக்கவும்.**
- அவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணும் விதமாக, அவர்களுடைய பெயர்களை அறிந்து **அவர்களை அவர்களது** பெயர்களால் அல்லது அவர்கள் **அழைக்கப்பட விரும்பும் முறையில்** அவர்களை **அழைக்கவும்.**

பேசுதல்

- உங்கள் கருத்துக்களை எளிமையான மொழியில் தெளிவாகச் சொல்லுங்கள்.
- பெற்றோரிடமிருந்து குழந்தைகள் ஏற்கெனவே நிறையக் கற்றுவிட்டார்கள் என்றும் அவர்கள் தங்கள் நாளாந்த வேலைகளைச் செய்கிற போதே இன்னும் அதிகம் கற்குமாறு தூண்டப்பட்டு உற்சாகப் படுத்தப்படலாம் என்றும் அவர்கட்குத் தெரியப்படுத்துங்கள்.

**நம்பிக்கையைக் கட்டியெழுப்பல்**

- பெற்றோரை நீங்கள் நம்புவதை அவர்கட்குத் தெரியப்படுத்தி அவர்கள் உங்களை நம்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுங்கள்.

### விளங்கப்படுத்தல்

- **அறிவையும் அனுபவத்தையும் நல்ல பழக்கங்களையும்** பெற்றோர் செய்யும் வீட்டு வேலைகள் மூலமே குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றோர் பயன்படுத்த உதவுவதே உங்களுடைய பங்கு என்று விளங்கப்படுத்துங்கள்.
- குழந்தைகள் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் சரியாகச் செய்ய முடியாது என்றும் எதையும் திரும்பத் திரும்பச் செய்தே தங்களது பிழைகளை அவர்கள் திருத்திக் கொள்கிறார்கள் என்றும் பெற்றோருக்கு விளங்கப்படுத்துங்கள்.

### கலந்தாலோசனை

- பெற்றோர் தமது குழந்தைகளுடன் அன்போடு பேசி, தடவி, அவர்கள் சொல்வதைக் கவனித்துக் கேட்டு அவர்கள் எப்படித் தங்கள் **அறிவையும் திறமைகளையும் நோக்கையும்** எவ்வாறு விருத்தி செய்கிறார்கள் என்று கவனித்துவரவேண்டிய தேவை பற்றிப் பெற்றோர்களுடன் கலந்து பேசுங்கள்.

### செய்து காட்டுதல்

- செயல் முறைகளைப் பெற்றோருக்குச் செய்து காட்டுவது அவசியமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், அவசியமான பொருட்களைச் சேகரித்துப், பெற்றோருக்கு நடைமுறை அனுபவம் கிடைக்கும் விதமாக, ஒரு செயல் முறையைச் செய்து காட்டுங்கள்.

தொடக்க நிலைப் பிள்ளைப்பருவ விருத்திக்காக வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகள் பற்றி எட்டுச் சிறு நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இது அவற்றுள் ஒன்று

# வெளியே வேலை செய்யும் போது

**நிலவரங்கள்**

1. தோட்டத்தைத் துப்புரவாக்கும் போது
2. விதைப்பதற்கு பாத்தி கட்டும் போது
3. விதைக்கும் போது
4. கன்றுகளை நடும் போது
5. அறுவடையின் போது
6. பண்டிகைக்கு ஆயத்தமாகும் போது

# வெளியே வேலை செய்யும் போது

## செயல்முறைகள் பற்றிய அறிமுகம்

- பெற்றோர் வெளியில் வேலை செய்யும் போது குழந்தைகளுடன் கதைத்து மகிழுவது அவசியம். குழந்தைகள் வெய்யிலிலும் நிழலிலும் விளையாடுகின்றனர். பெற்றோருக்கு உதவி செய்தோ தாங்களே ஏதாவது செய்தோ ஓடித்திரிந்தோ தங்களது நேரத்தைப் போக்குகின்றனர். பல்வேறு பொருட்களுடன் பரிசோதனை செய்வதனால் அறிவைப் பெறுகின்றனர்.

## கதைத்தல்

- செயல்முறைகளை எப்படி ஒவ்வொன்றாக அறிமுகம் செய்வது என்றும்
- அவை மூலம் விருத்தி செய்யக்கூடிய அறிவு. திறமைகள், நல்ல பழக்கங்கள் ஆகியன பற்றிப் பெற்றோருக்கு நினைவூட்டியும்
- தமது குழந்தைக்குப் பொருத்தமான செயல்முறைகளைத் தெரிந்தெடுப்பதற்கு அவர்கட்கு நினைவூட்டியும்
- வெவ்வேறு பொருள்களை அவதானித்து அவற்றை உவந்து அவை பற்றிக் குழந்தைகள் கதைக்கும்படி செய்வது பற்றியும் அவர்களிடம் கதைப்போம்.

## விளங்கப்படுத்தல்

- செயல்முறைகள் பற்றிய புத்தகத்திலிருந்து ஒரு செயல் முறையைத் தெரிவதும் குழந்தையின் விருத்திக்கு அதை பயன்படுத்துவதும் பற்றி பெற்றோரிடம் விளக்குவோம்.

உதாரணம்: இலைகளை அடையாளம் காண்பது.

1. பல வகை இலைகளைச் சேகரித்து அவற்றிடையில் உள்ள வித்தியாசங்கள் பற்றிக் கதைப்பது பற்றி விளங்கப்படுத்துங்கள்.
2. இலைகளைத் தொட்டு வித்தியாசங்களை அறியும்படி குழந்தைகளை வழி நடத்துவது பற்றி விளங்கப்படுத்திக் கதையுங்கள்.

பெற்றோரின் கேள்விகட்குத் தெளிவான பதில்களைக் கொடுங்கள்

**செய்து காட்டுதல்**

- சேகரிக்கப்பட்ட இலைகளைக் கொண்டு செயல்முறைகளை எப்படி ஏற்பாடு செய்யலாம் என்று செய்து காட்டுங்கள்.
    - * (நிறத்துக்கும் வடிவத்துக்கும் ஏற்றபடி) வகைப்படுத்தி குவியல்களாக்குவது
    - * நீளத்துக்கு ஏற்றபடி அடுக்குவது
    - * இலைகளைக்கொண்டு விசிறிகள். தொப்பிகள் செய்வது.
    - * இலைகளைக் கிழித்துத் துண்டாக்கி மீண்டும் பொருத்திப் பார்ப்பது.
    - * இலைகளை மணல்மீது வைத்து அவற்றைச் சுற்றி வரைவது.

**கலந்துரையாடல்**

- (மண், மணல், கல் போன்ற) வேறுபட்ட பொருள்களின் இயல்பை விளங்கி அறிய அவற்றை அவதானித்துப் பரிசோதனைகள் செய்வது அவசியம்
- நமது சுற்றாடலில் உள்ள பொருட்களின் பயன்.

    உதாரணம்: அலங்கார வேலைகட்கும். (கோயில்) வழிபாட்டுக்கும், வீட்டை அழகு படுத்தவும் பயன்படுகின்றன.
- செடிகளைப் பேணிப் பாதுகாக்க குழந்தைகட்கு வழி காட்டும் முறை.

    உதாரணம்: ஒரு பாடல்,

    1. சூழும் மரங்கள் மேல் மலர்கள்
       றோசாச் செடியில் செம் மலர்கள்
       காசித்தும்பை தனில் மலர்கள்
       செடிகள் வளர்த்தால் வரும் மலர்கள்
    2. மரங்கள் முழுவதும் மலர்கள் அழகுதான்
       றோசாப் பாத்தியில் மலர்கள் அழகுதான்
       என் சிறிய செடியில் மலர்க்ள் அழகுதான்
       புது மலர் நிறையும் தோட்டம் அழகுதான்

பெற்றோரை ஊக்குவித்தல்

- சந்திப்பின் போது தமது யோசனைகளைச் சொல்லும்படியும்
- நடைமுறைப்படுத்திய செயல்முறைகள் மூலம் குழந்தைகள் பெற்ற அறிவும் அனுபவமும் பற்றிய தகவல்களையும் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் முன் வைக்கும்படியும் பெற்றோரை ஊக்குவிக்கவும்.



# வெளியே வேலை செய்யும் போது 1

## தோட்டத்தைத் துப்புரவாக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- நாங்கள் தோட்டத்தைக் கூட்டித் துப்புரவாக்கும் போது, தோட்டத்தில் குப்பை இருப்பது அழகில்லை என்று சொல்லிக் கேள்விகள் கேட்டுக் குழந்தையை நம்முடன் உரையாடலில் ஈடுபடுத்துவோம்.

  உதாரணம்: வேறெங்கே குப்பையையும் விழுந்த இலைகளையும் காணுகிறீர்கள்?

  * குப்பை இல்லாத துப்புரவான ஒரு இடம் பற்றிக் கதைக்கிறது.
  * துப்புரவு பற்றி அடிப்படையான ஒரு விளக்கம் பெறுகிறது.

- (குழந்தை கையில் பிடிக்கும் என்றால்) குழந்தையிடம் ஒரு சிறு விளக்குமாற்றைக் கொடுத்து, எங்கள் கண்ணுக்குத் தெரியும் ஒரு பகுதியைக் கூட்டச் செய்வோம்.

  * கைகள் மீது ஆளுமையை விருத்தி செய்கிறது.

- தோட்டத்தில் துப்புரவான ஒரு இடத்தில் குழந்தை மணலுடன் விளையாட ஒரு வசதி செய்து கொடுப்பது அவசியம்.

  உதாரணம்:

  * ஒன்றிணைந்த கைகளில் மணலை எடுத்துச் சிரட்டையை நிரப்புவது.
  * சிரட்டையில் நிரம்பிய மணலைக் கொண்டு வேறு பாத்திரங்களை நிரப்புவது.

  * மணலைத் தொடுவதில் மகிழ்வடைகிறது.
  * அளவு பற்றி அடிப்படை அனுபவத்தை விருத்தி செய்கிறது.

# வெளியே வேலை செய்யும் போது 1

## தோட்டத்தைத் துப்புரவாக்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- குழந்தையிடம் ஒரு சிறு விளக்குமாற்றைக் கொடுத்து தோட்டத்தை நாங்கள் கூட்டித் துப்புரவாக்குவதற்கு உதவும் படி செய்வோம். தினமும் ஏன் தோட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று குழந்தையிடம் கேட்டு குழந்தையுடன் அதைப் பற்றிக் கதைப்போம்.

| |
|---|
| * அன்றாட வேலைகட்குப் பழக்கப்படுகிறது. |
| * தாயுடன் நெருக்கமான உறவை விருத்தி செய்கிறது. |

- நாம் (விளக்குமாற்றால் கூட்டும் போது) நாம் தரையில் செய்யும் கோலத்தைப் பின்பற்றித் தோட்டத்தில் ஒரு பகுதியைக் கூட்டும்படி குழந்தையை ஊக்குவிப்போம்.

| |
|---|
| * கூட்டுவதில் ஒரு கோலத்தைப் பின் பற்றுகிறது. |
| * புது விதமாக எதையாவது செய்யப் பழகுகிறது. |

- குழந்தையிடம் ஒரு சிறு கூடையைக் கொடுத்து, சேர்த்த குப்பையை ஒரு குப்பைக் குழிக்குள் அல்லது அதற்கு உரிய ஒரு இடத்தில் போடச் செய்வோம்.

| |
|---|
| * நல்ல பழக்கமொன்றை விருத்தி செய்கிறது. |
| * செய்த வேலை பற்றிய விளக்கமொன்றைப் பெறுகிறது. |

# வெளியே வேலை செய்யும் போது 1

## தோட்டத்தைத் துப்புரவாக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- குப்பையைச் சேர்த்துக் குப்பைக் குழிக்குள் போடும் போது தோட்டத்தைத் துப்புரவாக வைப்பதன் அவசியம் பற்றிக் குழந்தையிடம் கதைப்போம்.

> * தோட்டத்தைத் துப்புரவாக வைத்திருக்கும் ஒரு அனுபவத்தைப் பெறுகிறது.

- தடியால் மணலில் ஒரு கோடு கீறிக் குழந்தையையும் விரும்பியபடி மணலில் கோடுகள் கீற விடுவோம்.

> * கைகள் மீது கட்டுப்பாட்டை விருத்தி செய்கிறது.
> * கீறியதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறது.

- கையை மணல் மேல் வைத்து அதைச் சுற்றித் தடியொன்றால் கீறுமாறு குழந்தைக்கு வழி காட்டுவோம்)

> * எழுதுவதற்கு ஏற்ற படி கையைக் கட்டுப்படுத்தலை விருத்தி செய்கிறது.

# வெளியே வேலை செய்யும் போது 1

## தோட்டத்தைத் துப்புரவாக்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- தோட்டத்தில் துப்பரவான இடமொன்றில் இருந்து மணலுடன் விளையாடக் குழந்தைக்கு வாய்ப்பு அளிப்போம்.

  உதாரணம்:

  * கைகளில் மணலை அள்ளிச் சிரட்டைகளை நிரப்புவது.
  * பெரிய சிரட்டையிலுள்ள மணலால் சிறியவற்றை நிரப்புவது.
  * தராசு ஒன்று செய்து மணலை நிரப்புவது.
  * வெற்றுத் தகரமொன்றால் மணலை அளப்பது.

  * அளத்தல், பாரம் பற்றிய அனுபவத்தை விருத்தி செய்கிறது.
  * விளையாடி மகிழுகிறது.

- விரலால் அல்லது ஒரு தடியால் மணல் மேல் கோடுகள் / படங்கள் வரையும்படி குழந்தையை ஊக்குவிப்போம்.

  * எழுத ஆயத்தத்தை விருத்தி செய்கிறது.
  * சிறு விரல்கட்குப் பயிற்சி அளிக்கிறது.

- கூட்டித் துப்புரவாக்கி முடியும் வரை (தோட்டச் செடியிலிருந்து பிடுங்கிய) இலை ஒன்றை நிலத்தில் வைத்து ஒரு கையால் அதைப் அழுத்திக் கொண்டு மறு கையால் அதைச் சுற்றிக் கோடு கீறும் படி சொல்லுவோம்.
- ஒரு கோலத்தை உண்டாக்கும் முறையில் இலைகளை நிலத்தில் பல இடங்களில் வைத்து அவற்றைச் சுற்றி வரைய வழிகாட்டுவோம்.

  * எழுதும் திறமையை விருத்தி செய்கிறது.
  * கோலமொன்றை வரைகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 2

## விதைப்பதற்குப் பாத்தி கட்டும் போது

### மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு

- நாங்கள் விதைக்கத் தரையை ஆயத்தமாக்கும் போது. விளையாட்டு மண்வெட்டி ஒன்று செய்து, குழந்தை நம்மைப்போல் செய்ய வாய்ப்பு அளிப்போம்.

> * உடற் பயிற்சியுடன் புதிய அனுபவமும் பெறுகிறது.

- கிறவல், மண்/மண்ல் ஆகியவற்றைத் தொட்டுப் பார்க்கும்படி குழந்தையை வழி நடத்தி, என்ன உணர்கிறது என்று குழந்தையிடம் கேட்போம்.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்: | * கிறவல் | - | முரடானது |
| | * மண்/மணல் | - | மெதுவானது/அழுத்தமானது |

> * தொடுவதன் மூலம் இயற்கைப் பொருட்களை அடையாளம் காணுகிறது.
> * அவை பற்றி நினைப்பதைச் சொல்லுகிறது.

- வெளியில் விளையாடிய பின்பு குழந்தையின் கைகளைக் கழுவுவோம்/ கழுவ உதவுவோம்.

> * சுத்தமாயிருக்கப் பழகுகிறது.
> * தானாக வேலை செய்யப்பழகுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 2

## விதைப்பதற்குப் பாத்தி கட்டும் போது

### மூன்று வயதுக்கு மேற்பட்டகுழந்தைகட்கு

- நாம் மண்வெட்டியால் மணலைக் கிளறும் போது (கிடைக்குமென்றால்) சிறு மண்வெட்டி ஒன்றைப் பாவிக்கக் குழந்தைக்கு வாய்ப்புக் கொடுப்போம்.

> * உடல் விருத்திக்குப் பயனுள்ள புதிய அனுபவம் ஒன்றைப் பெறுகிறது.
> * சேர்ந்து வேலை செய்யும் பழக்கத்தை விருத்தி செய்கிறது.

- கொத்திய மண்ணை விதைவிதைப்பதற்கு நாங்கள் ஆயத்தப்படுத்தும் போது அதைத் தொட்டுப்பார்க்கும் படி குழந்தையை அனுமதிப்போம்.

> * மண்ணின் வகைகளை அடையாளம் காணுகிறது.
> * பிற இடங்களில் காணும் மண்ணை அடையாளம் காணப்பழகுகிறது.

- வேலை முடிந்து வீட்டுக்குள் போகும் முன்பு குழந்தையின் கை கால்களைக் கழுவுவோம்.

> * சுத்தமாக இருக்கப் பழகுகிறது
> * சுயமாக வேலை செய்யப் பழகுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 2

**விதைப்பதற்குப் பாத்தி கட்டும் போது**

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- வேலை செய்யும் இடத்திற்கு அருகே பெறப்பட்ட சில சிறு கற்களைக் குழந்தையிடம் கொடுத்து (சிறிய/பெரிய கற்களைக் கொண்ட குவியல்களாக) அவற்றை வகைப்படுத்தும் படி செய்வோம்.

> * வகைப்படுத்துவதில் அனுபவம் பெறுகிறது.
> * குவியல்கள் பற்றிய விளக்கத்தை விருத்தி செய்கிறது.

- மண்ணில் ஒரு கல்லை வைத்து அதைச் சுற்றி விரலால் அல்லது தடியால் கீறும் படி குழந்தைக்கு வழி காட்டுவோம். அதைப் பழகிய பின்பு பெரிய கற்களைச் சுற்றிக் கீற விடுவோம்.

> * விரல்கள் எழுதுவதற்குப் பழகுகின்றன.
> * எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறது.

- தயாரிக்கப்பட்ட பாத்தியில் விதை விதைக்க நாங்கள் மண்ணில் குழிகள் தோண்டும் போது சிரட்டையால் மண்ணில் குழிகள் தோண்டுவதற்குக் குழந்தையை அனுமதிப்போம்.

> * வேலையில் உதவி செய்து அனுபவம் ஒன்றைப் பெறுகிறது.
> * வேலை செய்வதில் மகிழ்வடைகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 2

## விதைப்பதற்குப் பாத்தி கட்டும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்டகுழந்தைகட்கு**

- தோட்டத்திலிருந்து வெவ்வேறு விதமான கற்களைக் கொண்டு வந்து அவற்றை (பெரிய/சிறிய கற்கள், கருங்கல் / வெள்ளைக் கல் என்ற விதமாக) பிரிக்கும்படி குழந்தைக்கு வழிகாட்டுவோம். குழந்தையை அது பற்றிக் கதைக்கச் செய்வோம்.

> * கற்களை அடையாளம் காணுகிறது.
>
> * குவியல்களாகப் பிரித்து கணிதக் கருத்தாக்கம் ஒன்றை விருத்தி செய்கிறது.

- பெரிய கற்களில் சிலவற்றை மணல் மீது வைத்து ஒவ்வொன்றையும் சுற்றி ஒரு தடியாலோ விரலாலோ கோடு கீறும்படி குழந்தைக்கு வழிகாட்டுவோம். ஒரு கோலத்தில் அமையும்படி கற்களை வைக்க ஊக்குவிப்போம். குழந்தை செய்ததைப் பாராட்டுவோம் / புகழுவோம்.

> * கைகள் எழுதுவதற்குப் பழக்கப்படுகின்றன.
>
> * கோலங்களை வரையும் பயிற்சியொன்று பெறுகிறது.
>
> * விளையாடி மகிழுகிறது.

- விதைகளை விதைக்க நாம் குழிகளைத் தோண்டும் போது, ஒரு சிரட்டையால் மண்ணைக் கிண்டிக் குழிகள் தோண்டுவதற்குக் குழந்தைக்கு ஒரு வாய்ப்புக் கொடுப்போம்.

> * வேலையில் உதவும் பழக்கத்தை விருத்தி செய்கிறது.
>
> * தோண்டப் பட்ட குழிகளை பெரியது, சிறியது, ஆழமானது, ஆழமற்றது என்ற விதமாக அடையாளம் காணுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 3

## விதைக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- கன்றுகளுக்கான பாத்தியில் எப்படி விதைகள் விதைக்கப்படுகின்றன என்று குழந்தையை அவதானிக்க விடுவோம். நாங்கள் எங்கள் வேலையை முடிக்கும் வரை குழந்தையிடம் சில விதைகளைக் கொடுத்து அவற்றிடையிலான வித்தியாசங்களை அடையாளம் காணும்படி விடுவோம்.

> * அவதானிக்கப் பழகுகிறது.
> * விதைகளுடன் விளையாடி மகிழ்ந்து கணித அனுபவம் ஒன்றைப் பெறுகிறது.

- குழந்தையிடம் வேகமாக முளைக்கும் கடுகு, கடலை போன்ற விதைகளையும அவற்றைப் போட்டு வைக்க மண்ணுடனான துளை போட்ட தகரம் ஒன்றையும் கொடுப்போம். அவை ஒவ்வொரு நாளும் எப்படி வளருகின்றன என்று கவனிக்கச் செய்து கேள்விகள் கேட்போம்.

> * செடிகள் வளருவதைக் காண்கிறது.
> * கேள்விகளுக்கு மறுமொழி சொல்லப் பழகுகிறது.

- நாங்கள் கன்றுகளுக்கான பாத்தியில் வேலை செய்யும் போது அயலில் உள்ள செடிகளிற் பிடுங்கிய சில இலைகளைக் குழந்தை விரும்பியபடி தரையில் அடுக்குவதற்கு வழி காட்டுவோம்.

> * கோலங்களைச் செய்வதில் அடிப்படை அனுபவம் பெறுகிறது.
> * கட்டுப்பாடற்ற விளையாட்டில் மகிழுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 3

## விதைக்கும் போது

### மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு

- நாங்கள் வேலையை முடிக்கும் வரை விதைகளை விதைக்கும் விதத்தைக் கவனித்தும் சுற்றிலும் பார்த்தும் மகிழும்படி குழந்தைக்கு வழி காட்டுவோம்.

> * அவதானிப்பதில் ஆர்வத்தை விருத்தி செய்து இயற்கைச் சுற்றாடலை அனுபவிக்கிறது.

- (கடுகு, கடலை, பயறு போன்ற) வேகமாக வளரும் விதைகள் சிலவற்றை வெறும் தகரங்களிலோ உடைந்த / வெடித்த சட்டிகளிலோ கட்டிய பாத்தியிலோ வளர்ப்பதற்குக் குழந்தையை அனுமதிப்போம். காலத்துக்குக் காலம் செடிகள் எப்படி உண்டாகின்றன என்று கவனிக்கும்படி குழந்தைக்குச் சொல்லிக் கண்டதைப் பற்றிக் கேள்வி கேட்போம்.

> * செய்தும் பார்த்தும் விளக்கத்தை விருத்தி செய்கிறது.
> * அவதானிக்கவும் கண்டதை விபரிக்கவும் பழகுகிறது.

- அயலிலுள்ள செடிகளிலிருந்து பிடுங்கிய சில இலைகளைக் குழந்தையிடம் கொடுத்து அவற்றை நீளத்தின் அடிப்படையில் நிரையாக அடுக்கும்படி செய்வோம். குழந்தை அவற்றைச் சுற்றிக் கோடு கீறச் செய்வோம்.

> * நீள் வரிசைக் கிரமத்தில் அடுக்கப் பழகுகிறது.
> * கணித அனுபவமொன்றைப் பெறுகிறது.
> * எழுதுவதற்கு முன்பான ஒரு திறமையை விருத்தி செய்கிறது.

# வெளியே வேலை செய்யும் போது 3

## விதைக்கும் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- வடிவத்திலும் அளவிலும், (மா, கறிவேப்பிலை, எலுமிச்சை போன்ற) வித்தியாசமான இலைகளைத் தோட்டத்திலிருந்து எடுத்துக் குழந்தையிடம் கொடுத்து அவற்றை அடையாளம் கண்டு பெயர் சொல்லுவதற்கு உதவுவோம்.

> * வடிவத்தின் அடிப்படையில் வேறுபடுத்திப் பழக்கப்படுகிறது.
> * இலைகளை அவற்றின் மணத்தால் அடையாளம் காணுகிறது.
> * கண்டதைப் பற்றி ஏதாவது சொல்லுகிறது.

- செடிகள் வளருவது எப்படி என்று குழந்தையை அவதானிக்க விட்டும் குருத்து இலைகள் பற்றியும் முற்றிய இலைகள் பற்றியும் கதைப்போம்.

> * அவதானித்துப் பழக்கப்படுகிறது.
> * வீட்டில் வளரும் செடிகளைப் பார்த்து மகிழுகிறது.

- கன்றுகளுக்கான பாத்தியில் குழந்தை (சிறு துளைகளுள்ள தகரம் அல்லது வேறு சிறிய பாத்திரம் கொண்டு) தண்ணீரைத் தெளிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம்.

> * தோட்டத்தில் வேலை செய்து பழகுகிறது.
> * செடிகள் வளரும் காட்சியில் மகிழுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 3

## விதைக்கும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- மா, கொய்யா, கறிவேப்பிலை போன்ற மரங்கள் இருந்தால் அவற்றின் இலைகளைக் குழந்தையிடம் கொடுத்து, கையில் வைத்து நசுக்கி முகர்ந்து பார்த்து அடையாளம் கூற வழி காட்டுவோம்.

* மணத்தால் இலைகளை அடையாளம் காணுகிறது.

- செடிகள் எவ்வாறு வளருகின்றன என்று தினமும் அவதானிக்கும் படியும் அவற்றில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிக்கும் படியும் குழந்தையை ஊக்குவிப்போம்.

உதாரணம்: மிளகாய்ச் செடி, தக்காளிச் செடி

* அவதானித்துப் பழக்கப்படுகிறது.

- செடிகட்கு (சிறிய துவாரங்களுள்ள தகரமொன்றால்) தண்ணீர் விடுவதன் மூலம் குழந்தையையும் பங்குபற்றச் செய்வோம்.

* தெளிப்பதற்கும் ஊற்றுவதற்கும் இடையே வித்தியாசத்தை அறிகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 4

**கன்றுகளை நடும் போது**

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- நாங்கள் கன்றுகளை நடும் போது குழந்தை ஒரு கன்றை வேறாக நடுவதற்குக் குழந்தைக்கு ஒரு வாய்ப்புக் கொடுப்போம்.

> * வேலையில் பங்கு பற்றி மகிழுகிறது.
>
> * மூத்தவர்களுடன் நெருக்கமான உறவைக் கட்டியெழுப்புகிறது.

- குழந்தை, சுற்றாடலில் உள்ள பூக்கள், செடிகள், வண்ணத்துப் பூச்சிகள் போன்ற அழகானவற்றைக் கண்டு மகிழச் செய்வோம்.

  குழந்தை கண்டவற்றைப் பற்றி எளிமையான கேள்விகள் கேட்போம். அன்புடன் கதைத்து மேலும் பொருட்களைக் காட்டுவோம்.

> * சூழல்/சுற்றாடல் பற்றிய தவல்களை அறிய அக்கறை எடுக்கிறது.
>
> * அழகான பொருட்களைக் காணுவதில் மகிழ்வுறுகிறது.
>
> * கேள்வி கேட்டுப் பழக்கப்படுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 4

**கன்றுகளை நடும் போது**

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- கன்றுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட பாத்தியில் நாம் கன்றுகளை நடும் போது, குழந்தையிடமும் சில கன்றுகளை நடும் பொறுப்பைக் கொடுப்போம்.

> * செடிகள் மீது விருப்பத்தை வளர்க்கிறது.
>
> * மூத்தோருடன் நெருக்கமான பந்தத்தை ஏற்படுத்துகிறது.

- வீட்டுக்கு வெளியே நாம் கன்றுகளை நட்டுக் கொண்டிருக்கும் போது குழந்தையைச் சுற்றாடலின் அழகைக் காணச் செய்வோம். மலர்கள், துளிர்கள், மரங்களுக்கு வரும் அழகான பறவைகள்.
- மரங்களில் மலரும் மலர்கள், மரங்களில் உள்ள பழங்கள்
- மலர்களில் தேனுண்ண வரும் தேனீக்கள், வண்ணத்துப் பூச்சிகள்.
- பழங்களை உண்ண வரும் பறவைகள் பற்றிக் குழந்தை கேட்கும் கேள்விகட்கு மறுமொழி சொல்லுவோம்.

> * செடிகளதும் மரங்களதும் அழகில் மகிழுகிறது
>
> * சுற்றாடல் மீது விருப்பத்தை விருத்தி செய்கிறது.
>
> * பறவைகளை அடையாளம் காணுகிறது.
>
> * கண்டவற்றைப் பற்றிக் கதைக்கிறது.

# வெளியே வேலை செய்யும் போது 4

**கன்றுகளை நடும் போது**

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- தோட்டத்திலிருந்து இலைகள், பூக்கள், விதைகள் ஆகியனவற்றைச் சேகரித்து குழந்தை விரும்பியபடி அவற்றை குவியல்களாக வேறுபடுத்தும்படி வழிகாட்டுவோம்.

> * வகைப்படுத்துவதில் அனுபவம் பெறுகிறது.
>
> * சுயமாக விளையாடி மகிழுகிறது.

- குழந்தையிடம் இலைகளாலான தொப்பிகளும், ஊதல்களும் கொடுத்து வெளியில் தனியாகவோ வேறு குழந்தைகளுடனோ விளையாட வழிகாட்டுவோம்.

> * சுற்றாடலில் காணப்பட்டவற்றுடன் விளையாடுகிறது.
>
> * விளையாடி மகிழுகிறது.

- தோட்டத்தில் உள்ள அழகான பூக்கள், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் பற்றிக் குழந்தைகளுடன் பாடுவோம், கதைகள் சொல்லுவோம்.

> * சுதந்திரமாகப் பாடுகிறது.
>
> * பாடி மகிழுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 4

**கன்றுகளை நடும் போது**

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- பலவகைப்பட்ட இலைகளைச் சேகரித்து அவற்றைத் தொட்டு, மென்மையான, உதிர்ந்த, உலர்ந்த என்ற அடிப்படையில் வகைப்படுத்துமாறு குழந்தையை வழி நடத்துவோம்.

  * இலைகளின் இயல்பு பற்றிக் கற்கிறது.
  * அவைபற்றிக் கதைக்கிறது.

- இலைகளைக் கொண்டு தொப்பிகளும் கொடிகளும் செய்யவும் இலைகளைக் கிழித்துப் பொம்மைப் பறவைகள் செய்யவும் குழந்தைக்குப் பயிற்றுவோம்.

  * சிந்திக்கும் ஆற்றலை விருத்தி செய்கிறது.
  * நுண்ணிய வேலைகட்குப் பழக்கப்படுகிறது.

- அழகிய பூக்கள், அழகிய பறவைகள், பழங்கள் பற்றிப் பாடுமாறு குழந்தையை ஊக்குவிப்போம். குழந்தையுடன் எளிமையான பாடல்களைப் பாடுவோம்.

  * சுதந்திரமாகப் பாடுகிறது.
  * பாடி மகிழுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 5

## அறுவடையின் போது

### மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு

- குள்ளமான செடிகளினின்று (கத்தரி, வெண்டி) போன்ற காய்கறிகள் பிடுங்கும் போது அவற்றைத் தொடும்படி குழந்தைகளை ஊக்குவிப்போம். அவை பற்றிக் குழந்தைகளுடன் கதைப்போம்.

  * மூத்தவர்கட்கு உதவுவதில் மகிழ்வடைகிறது.
  * அழுத்தமான, முரடான காய்கறிகள் பற்றிக் கற்கிறது.
  * உணர்ந்தது பற்றிக் கதைக்கிறது.

- நாம் அறுவடை செய்து காய்கறிகளை இனம் பிரிக்கும் போது சில காய்கறிகளை இனம் பிரித்துக் கூடைகளில் போடக் குழந்தைக்கு ஒரு வாய்ப்பளிப்போம்.

  * வெவ்வேறு வகையான காய்கறிகளை வகைப்படுத்துகிறது.
  * மூத்தோருடன் நெருங்கி உறவாடுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 5

## அறுவடையின் போது

### மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு

- அறுவடை பல்வேறு முறைகளில் செய்யப்படுகிறதா என்று குழந்தை அறிவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவோம், பழங்களை ஒவ்வொன்றாகப் பிடுங்குதல், செடியை வேரோடு பிடுங்குதல், செடிகளதும் மரங்களதும் அழகில் மகிழுகிறது, தடி கொண்டு பிடுங்குதல், அரிவாளால் வெட்டுதல்.

  பொருத்தமான போது குழந்தையை இவற்றில் ஈடுபடுத்துவோம்.

  * சுற்றாடல் மீது பிரியத்தை விருத்தி செய்கிறது
  * மூத்தோருடன் வேலை செய்து பழகுகிறது.
  * அனுபவத்தினூடு விளக்கத்தை விருத்தி செய்கிறது.

- நாம் பல வகையான காய்கறிகளை இனம் பிரிக்கும் போது, குழந்தையும் வெவ்வேறு வகையான மரக்கறிகளை இனம் பிரிக்கும்படி செய்வோம்.

  * நிற அடிப்படையில் இனம் பிரிக்கிறது.
  * பழுத்த பழுக்காத பழங்கள் பிரிக்கப்படுகின்றன.
  * மூத்தோருடன் நெருக்கத்தை விருத்தி செய்கிறது.

- சோளங் கதிர்களைப் பிடுங்கிச் சேகரித்ததும் குழந்தையிடம் சில கதிர்களைச் சுத்தமாக்கும் படி கொடுப்போம். குழந்தையை ஒவ்வொன்றாக விதைகளைக் கழற்றச் செய்வோம்.

  * விரல் நுனிகளைப் பாவிக்கும் ஆற்றலை விருத்தி செய்கிறது.
  * கைகளால் நுண்ணிய வேலைகளைச் செய்து பழக்கப்படுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 5

## அறுவடையின் போது

**மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு**

- சோளம் அறுவடையாகும் போது குழந்தையிடம் ஒரு சோளங்கதிரைச் சுத்தப்படுத்தக் கொடுப்போம்.

> * விரல்களால் நுண்ணிய வேலை செய்து பழகுகிறது.

- வெவ்வேறு நிறங்களிலும் வடிவங்களிலும் உள்ள காய்கறிகளை இனம் பிரிக்கக் குழந்தையின் உதவியைப் பெறுவோம்.

> * வித்தியாசங்களை அடையாளம் காணுகிறது.
> * பெற்றோருக்கு உதவி செய்து பழகுகிறது.

- நாம் அறுவடை செய்யும் போது, அயலில் உள்ள குழந்தைகளுடன் நம் குழந்தை விளையாடக் கூடிய விளையாட்டுக்களை அறிமுகம் செய்வோம்.

  உதாரணம்: ஓடிப் போய் எனக்கு ஒரு....... கொண்டு வாருங்கள்.

> * சமூகப்பழக்கம் பெறுகிறது
> * விளையாடி மகிழுகிறது.

- நாம் வெளியில் வேலை செய்யும் போது, குழந்தை ஓடித்திரிந்தும் ஆடி மகிழ்ந்தும் பறவைகள் மிருகங்களின் ஓசைகளை போல செய்தும் விளையாட ஒரு வாய்ப்பை அளிப்போம்.

> * பிறருடைய குழந்தைகளுடன் விளையாடி மகிழுகிறது.
> * பறவைகள் /மிருகங்களின் ஒலிகளைப் போல செய்யப் பழகுகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 5

## அறுவடையின் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- முற்றிய விதைகட்கும், பிஞ்சு விதைகட்குமிடையில் உள்ள வித்தியாசத்தைக் குழந்தை அடையாளம் காணச் செய்வோம்.

  உதாரணம்: சோளம்

  குழந்தை எப்படி அடையாளம் காணுகிறது என்பது பற்றிக் கதைப்போம்.

  > * (விரல்களால் அழுத்தி) வித்தியாசங்களை அறியும் ஆற்றலை விருத்தி செய்கின்றது.
  > * வெள்ளை, மஞ்சள், செம்மஞ்சள் நிறங்களை அடையாளம் காணுகிறது.

- நாம் அறுவடை செய்யும்போது நம் குழந்தை அயலில் உள்ள குழந்தைகளுடன் வெளியில் விளையாட ஏற்ற விளையாட்டுக்களை அறிமுகப் படுத்துவோம்.

  உதாரணம்: பொருட்களைச் செய்தல் / நிருமாணித்தல், போல செய்தல்.

  > * சமூகப் பழக்கங்கள் பெறுகிறது.
  > * மற்றவர்களோடு விளையாடப் பழகுகிறது.

- நாம் வெளியில் வேலை செய்யும் போது குழந்தை ஓடித்திரிந்து பாடிப், பறவைகள் போலவும் மிருகங்கள் போலவும் ஒலி செய்யும் விதமான செயல் முறைகட்கு ஏற்பாடு செய்வோம்.

  > * கூடி விளையாடுகிறது.
  > * பொறுமையை விருத்தி செய்கிறது

# வெளியே வேலை செய்யும் போது 6

## கோவில் பண்டிகைக்கு ஆயத்தமாகும் போது

### மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு

- நாங்கள் தோட்டத்திலிருந்து பூப்பறித்து அதைக் கோயிலுக்கு கொண்டு போக ஆயத்தமாகும் போது குழந்தையிடம் கொஞ்சம் பூக்களைக் கொடுத்து ஒரு கூடையில் அடுக்கச் செய்வோம்.

> * மூத்தோர் செய்யும் வேலைகளைப் போல செய்கிறது.
> * விரல்கள் நுண்ணிய வேலைக்குப் பழக்கப்படுகின்றன.

- கோயிலுக்குக் கொண்டு போகவேண்டிய பொருட்களின் (பூக்கள், ஊதுபத்திகள், விளக்குத்திரி, எண்ணெய், கற்பூரம், மெழுகுதிரி, தீப்பெட்டி ஆகியன) பெயர் சொல்லி அவற்றைச் சேகரிப்பதில் குழந்தையையும் பங்கு பற்றச் செய்வோம்.

> * வழிபாட்டுத் தலத்திற்கு கொண்டு போக வேண்டியவை பற்றிக் கற்கிறது.
> * தாயுடன் பயனுள்ள முறையில் சேர்ந்து வேலை செய்கிறது.

- கோவிலுக்குப் போக முன்பு குளித்து/மேல் கழுவி சுத்தமாகிச் சுத்தமான உடை அணியும்படி குழந்தையைப் பழக்குவோம். கோவிலில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று குழந்தைக்கு நினைவூட்டுவோம்.

> * நல்ல பழக்கமொன்றை விருத்தி செய்கிறது.
> * வழிபாட்டுத் தலத்துக்குப் போக ஆயத்தமாகிறது.

# வெளியே வேலை செய்யும் போது 6

**கோவில் பண்டிகைக்கு ஆயத்தமாகும் போது**

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- நாங்கள் தோட்டத்தில் பூப்பிடுங்கி (நல்ல பூக்களை மட்டும்) கூடையில் அடுக்கும் போது பூக்களை வகை பிரித்து மாலையாக்குவதில் குழந்தையை ஈடுபடுத்துவோம். பூக்களின் பயன்கள் பற்றிக் குழந்தைக்கு நினைவூட்டுவோம்.

> * பூக்களை அடையாளங் காணும் திறமையையும் பூக்களால் அலங்கரிக்கும் திறமையையும் விருத்தி செய்கிறது.
> * சிந்திக்கும்படி தூண்டப்படுகிறது.
> * வகைப்படுத்தும் கணிதக் கருத்தாக்கத்தை விருத்தி செய்கிறது

- கோயிலுக்கு கொண்டு போக வேண்டிய பொருட்களை (பூக்கள், ஊதுவத்தி, விளக்குத் திரி, எண்ணெய், மெழுகுதிரி, கற்பூரம், தீப்பெட்டி ஆகியவற்றை) சேகரிப்பதில் குழந்தையைப் பங்கு பற்றச் செய்வோம்.

> * நல்ல பழக்கமொன்றை விருத்தி செய்கிறது.
> * யோசித்துக் கருத்துடன் கதைக்கிறது.
> * பொருட்களை வகைபிரித்துக் கணித அனுபவம் பெறுகிறது.

- கோவிலுக்குப் போகும் முன் குளித்து / மேல்கழுவி தன்னைச் சுத்தப்படுத்திச் சுத்தமான உடை அணியும்படி குழந்தையைப் பழக்கப்படுத்துவோம்.

> * சுத்தமாக இருக்கப் பழகுகிறது.
> * எந்த வேலையையும் மனமுவந்து செய்யும் பயிற்சியைப் பெறுகிறது.
> * சுத்தமான முறையில் நடக்கிறது.

# வெளியே வேலை செய்யும் போது 6

## கோவில் பண்டிகைக்கு ஆயத்தமாகும் போது

### மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு

- வெவ்வேறு வடிவங்களில் பண்டிகைக்கான வண்ணக் கொடிகளை நாங்கள் தயாரிக்கும் போது குழந்தையைச் சின்ன அலுவல்களில் ஈடுபடுத்துவோம்.

  உதாரணம்: (காகிதங்களை ஒரு இடத்தில் இருந்து இன்னொன்றுக்குக் கொண்டு போவது). மிகுதித் தாள்களை ஒட்டிக் குழந்தை சிறிய கொடிகளைச் செய்ய விடுவோம்.

  > * வேலையில் பங்கு பற்றி மகிழுகிறது.
  > * காகிதம் ஒட்டி அனுபவம் பெறுகிறது.

- தென்னங் குருத்தோலையால் செய்த பொம்மைப்பாம்பு போன்றவற்றைக் குழந்தையிடம் கொடுப்போம். குருத்தோலையால் நாங்கள் அலங்காரப் பொருள்களைச் செய்யும் போது குழந்தையை ஓலைகளை மடித்தும் ஒன்றாக வைத்தும் கோலங்களை அமைக்கும் படி செய்வோம்.

  > * புதிதாக எதையாவது செய்து மகிழுகிறது.

- பண்டிகை நாளன்று நடந்தவற்றைக் குழந்தை நினைவிற்குக் கொண்டு வரவும் அவற்றைப் போல செய்து விளையாடவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவோம். குழந்தையின் விளையாட்டைப் பாராட்டுவோம்.

  > * கண்டதை நினைவு கூர்ந்து போல செய்கிறது.

# வெளியே வேலை செய்யும் போது 6

## கோவில் பண்டிகைக்கு ஆயத்தமாகும் போது

**மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகட்கு**

- பண்டிகைக்கு ஆயத்தமாகிப் பல நிறங்களிலும் வடிவங்களிலும் கொடிகள் செய்யும் போது காகிதத்தை வெட்டி ஒட்டுவதில் குழந்தையை ஒத்துழைக்கச் செய்வோம். கொடிகளின் நிறங்களும் வடிவங்களும் பற்றிக் கதைப்போம்.

> * கைக்கும் கண்ணுக்கும் இடையே ஒருங்கிணைப்பை விருத்தி செய்கிறது.
> * அளவும் வடிவமும் பற்றிக் கணித அனுபவங்கள் பெறுகிறது.

- தென்னங் குருத்தோலையால் நாங்கள் அலங்காரப் பொருள்கள் செய்யும் போது, தென்னங் குருத்தோலையால் எப்படிப் பாம்புப் பொம்மை, பெட்டிகள் போன்றவை செய்யப்படலாம் என்று குழந்தைக்குச் செய்து காட்டுவோம். குழந்தை தான் விரும்பிய எதையும் செய்து அதைப் பற்றிக் கதைக்கட்டும்.

> * நுண்ணிய வேலை செய்து பழகுகிறது.
> * தான் செய்ததை விவரிக்கிறது.
> * புதிதாக எதையோ உருவாக்கி மகிழ்கிறது.

- பண்டிகையிலன்று செய்தவை, குழந்தை கண்டவை, குழந்தை சந்தித்தவர்கள ஆகியவை பற்றிப் பின்பு கதைக்கும்படி குழந்தையை ஊக்குவிப்போம்.

  கண்டவற்றைப் போல செய்து விளையாடும்படி குழந்தையை ஊக்குவிப்போம்.

> * முன்பு கண்ட ஒன்றை விவரிக்கிறது.
> * கூடிச் செய்கிறவற்றில் மகிழ்வு பெறுகிறது.